மொடக்குறிச்சி வட்டாரம், லக்காபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.L.P.சாலைமாணிக்கம், தலைவர்

க.எண். 02/2023-24 நாள்: **17.02.2024**

பொருள் : மனைப்பிரிவு - ஈரோடு மாவட்டம் - மொடக்குறிச்சி வட்டாரம் - புஞ்சை லக்காபுரம் ஊராட்சி மற்றும் கிராமம் ரீ.ச.எண்.214/4A-ல் -ல் 4700.00 ச.மீ. பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களால் திட்ட அனுமதி அளிக்கப்பட்டது - இறுதி உத்தரவு வழங்கி ஆணையிடல் - சார்பாக.

பார்வை:

1.அரசாணை எண். 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017.

2.உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் ROC No. XUIL6XSC/ /2023/TCP Date:29.11.2023

3.மனுதாரர் திரு.L.S.சரவணகுமார் மற்றும் திரு.L.S.ராஜேஸ்குமார் என்பவரது கடிதம் (சாலை பகுதிகள் மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவணங்கள்

4.திரு.L.S.சரவணகுமார் மற்றும் திரு.L.S.ராஜேஸ்குமார் என்பவர்களது விண்ணப்பம் நாள்: 03.01.2024

5.மனுதாரர் செலுத்திய கட்டணங்களின் சலாண் நகல்கள்

6.லக்காபுரம் ஊராட்சிக்கு தொகை செலுத்திய நாள்: 17.02.2024.

@@@@@@@@

உத்தரவு:-

பார்வை 1-ல் காணும் அரசாணை மற்றும் 2-ல் காணும் கடிதத்தின்படி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம், புஞ்சை லக்காபுரம் ஊராட்சியில் ரீ.ச.எண். 214/4A-ல் **4700.0**ச.மீ. (1.16 ஏக்கர்) நிலப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP / DTCP (ELPA)/ERODE/LAYOUT APPROVAL NO. **490/2023** என எண்ணிடப்பட்டு உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களால் பின்வருமாறு திட்ட அனுமதி எண்.**44/2023** வழங்கப்பட்டுள்ளது.

திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம்.

1	மனைப்பிரிவின் அமைவிடம்	ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், புஞ்சை லக்காபுரம் ஊராட்சி.
2	ரீ.சர்வே எண்.	214/4A
3	தொழில்நுட்ப அனுமதி வரைபடம் எண்	ம.வ./ஈமா(உ.தி.கு) எண். 490/2023
4	கோப்பு எண்	XUIL6XSC//2023/TCP Date:29.11.2023
5	மனைப்பிரிவின் பரப்பளவு	4700.00ச.மீ. (1.16 ஏக்கர்)
6	கோரிய மனையிடங்கள்	21
7	ஒதுக்கீடு செய்யப்பட்டவை	21
8	மனைப்பிரிவு சாலையின் பரப்பு மற்றும் மூலை முடுக்கு (மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது)	1459.24+6.75=1465.99 ச.மீ. தான சாசன ஆவண எண்.9381/2023 dt.22.11.2023.
9.	பூங்கா / திறந்த வெளி இடம்	18.67ச.மீ. (தான சாசன ஆவண எண். 9381/2023 dt.22.11.2023.)
		10% பூங்கா 324.08 ச.மீ. பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.7,01,633/- உரிய அரசுத் தலைப்பில் மனுதாரரால் 27.11.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது.
10.	மின் பொது உபயோக இடம்	17.10 ச.மீ.
11.	கடை (மனுதாரர் விற்பனைக்குரியது)	-
12.	நிபந்தனைகள் வரிசை எண்.17-ஐ பூர்த்தி செய்த விபரம்	-

உள்ளூர் திட்டக் குழுமத்தில் தெரிவிக்கப்பட்டவாறு கூராய்வுக் கட்டணம் ரூ.7,050/- ஐ இரசீது எண்.2023092716016/27.09.2023, நன்னிலை வரி தொகை ரூ.7,500/-ம், அபிவிருத்திக் கட்டணம் தொகை ரூ.23,500/- தகவல் பலகை கட்டணம் (Display Board Charges) ரூ.10000/- மொத்தம் ரூ.41,000/-ஐ DTCP கணக்கில் இரசீது எண்.2023112816016/28.11.2023, 10% பூங்கா 324.08 ச.மீ. பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.7,01,633/-ஐ DTCP கணக்கில் இரசீது எண்.2023112716016/27.11.2023 –ல் செலுத்தி, செலுத்துச் சீட்டின் நகலினை ஒப்படைத்துள்ளார். நிலமாற்ற பயன்பாட்டுக் கட்டணம் வழிகாட்டி மதிப்பீட்டில் 3% தொகை ரூ.3,03,855/- ம் (ரூபாய் மூன்று இலட்சத்து மூன்றாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தைந்து மட்டும்) அரசு கணக்கில் சலாண் எண். 20240202016574/02.02.2024 –ன் படி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் உள்ளாட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வுக் கட்டணம் ரூ.21,000/- லக்காபுரம் ஊராட்சிப் பொதுநிதி கணக்கு எண்.1-ல் 17.02.2024 அன்று (பலவகை இரசீது எண்.2654/17.02.2024)-ல் லக்காபுரம் ஊராட்சிக்கு செலுத்தியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம், புஞ்சை லக்காபுரம் ஊராட்சியில் ரீ.ச.எண். 214/4A-ல் 4700.00 ச.மீ. (1.16 ஏக்கர்) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP / DTCP (ELPA)/ERODE/LAYOUT APPROVAL NO. **490/2023** என எண்ணிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு உரிய கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளதால் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி வரைபடம் அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. பார்வை 2-ல் காணும் உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 5 முடிய நிபந்தனைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். இந்நிபந்தனைகள் மீறப்பட்டதாக தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி இந்த உத்தரவு இரத்து செய்யப்படும்.

2. இந்த மனைப்பிரிவு ஒப்புதலுக்காக மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள், சான்றுகள் ஆகியவை தவறு என்றோ, போலியானது என்றோ அறியப்பட்டாலோ அல்லது இம்மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இந்த ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

3. விற்பனைக்குரிய மனையிடங்களை விற்பனை செய்யும் பொழுது இவ்வாணையின் நகலோடு உள்ளூர் திட்டக் குழுமத்தால் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விபரங்களை உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலரின் அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.

5. பத்திரப்பதிவு மற்றும் நில உடைமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழுப்பொறுப்பாவார்.

6. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் வழியாக மட்டும் ஒரே சீராக மின்கம்பங்கள் அமைத்து மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். Zig-Zag ஆக மின்கம்பங்கள் அமைக்கக் கூடாது.

7. குறைந்த வருவாய்க்கான மனைகளை மனை உட்பிரிவு மனை ஒருங்கிணைப்பு செய்யக் கூடாது.

8. இந்த வரன்முறைக்காக மனுதாரர் செலுத்திய கட்டணங்களில் ஏதேனும் குறைவு என பின்னர் ஆய்வு / தணிக்கையில் தெரிய வந்தால் நிலுவைத் தொகையினை மனுதாரர் முழுமையாக செலுத்த வேண்டும்.

9. வரன்முறை செய்யப்படும் மனையிடத்தினை அதற்கென ஒதுக்கப்பட்ட குடியிருப்பு/ வணிக பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் பயன்படுத்திட அனுமதி இல்லை.

10. அரசின் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்ய ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்
லக்காபுரம் ஊராட்சி
மொடக்குறிச்சி வட்டாரம்

பெறுதல்:

திரு.L.S.சரவணகுமார்,

திரு.L.S.ராஜேஸ்குமார்,

லக்காபுரம்,

ஈரோடு-638 002.

நகல் : 1.உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம்,
ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு, ஈரோடு.

2.ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), ஈரோடு அவர்களுக்கு
பணிந்தனுப்பப்படுகிறது.

3.சார்பதிவாளர் அலுவலகம், அவல்பூந்துறை.

4.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மொடக்குறிச்சி வட்டாரம்.

5. அலுவலக கோப்பிற்கு.

லக்காபுரம் ஊராட்சி மன்றம்

கூட்ட நடவடிக்கைகள் நகல்

2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் **21**ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு **லக்காபுரம்** ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி ஊராட்சியின் **சாதாரண** கூட்ட நடவடிக்கை நகல்

முன்னிலை:**திரு.L.P.சாலைமாணிக்கம், தலைவர்** அவர்கள்

தலைவர் உட்பட கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை: 13

பொருள் 08	**தீர்மானம் 25**
ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம் / ஊராட்சி ஒன்றியம், புஞ்சை லக்காபுரம் கிராமம் / லக்காபுரம் ஊராட்சிக்குட்பட்ட ரீ.ச.எண்.214/4A ல் 4700.00 சதுர மீட்டர் பரப்பில் திரு.L.S.சரவணகுமார் மற்றும் திரு.L.S.ராஜேஸ்குமார் ஆகிய இருவரும் சேர்ந்து அமைக்கவிருக்கும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் 21 மனைகள் அமைக்க உறுப்பினர் செயலர் / துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் (Roc No.UUIL6XSC/2023/TCP) நாள்:29.11.2023 ன் படி திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவின் மீது பரிசீலினை செய்யப்பட்டு மனுதாரர் ஊராட்சிக்கு தானமாக வழங்க வேண்டிய சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் திறந்தவெளி பூங்கா இடம் (OSR Land) ஆகியவற்றினை அரசு விதிமுறைகளின்படி தானமாக வழங்கியுள்ளதாலும், அதேபோல் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அனைத்தையும் செலுத்தியுள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவிற்கு 02/2023-2024 நாள்: 17.02.2024-ன் படி இறுதி உத்தரவு வழங்கியுள்ளதற்கு லக்காபுரம் ஊராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.	**அங்கீகரிக்கப்பட்டது** தலைவர் லக்காபுரம் ஊராட்சி மொடக்குறிச்சி வட்டாரம்

/உண்மை நகல்/

(ஒப்பம்)

தலைவர்
லக்காபுரம் ஊராட்சி